## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 2016

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்பு பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் மற்றும் அதனது நிர்வாக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - பணியகம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு பணியகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம 19 இன் பிரகாரம் பணிகொடை பொறுப்பு உடைய முதலீடு ஒன்று காணப்படின் குறிப்பிட்ட முதலீடு தொடர்பாக நியாயமான பெறுமதிக்கு சீராக்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு உண்மையான நலன் மற்றும் எதிர்பார்த்த நலன்களிடையே காணப்படும் வித்தியாசம், ஆயுள்கணிப்பு பெறுமதி மதிப்பீட்டின் மீது கணிக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம் என இனம் காண வேண்டும். எனினும் பணியகத்தினால் பணிக்கொடைப் பொறுப்புடக்காக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 151,637,722 இற்கான பெறுமதிகளுக்காக நியாயமான பெறுமதிக்கு சீராக்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த முதலீட்டு பெறுமதி ஆயுள் கணிப்பு பெறுமதி மதிப்பீட்டின் போது கவனத்தில் எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகளில் 02 கணக்கு விடயங்களில் முறையே ரூபா 2,453,136 இற்கான மற்றும் 21,140,548 இற்காக விளக்கமளிக்கப்படாத மீதிகள் உள்ளடங்கியிருந்த போதிலும் அம் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாடு செல்வோரின் முறைப்பாடுகள் / சச்சரவுகளை இணக்கஞ் செய்வதற்கு முகவர் நிறுவனங்களினால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பணியகத்தில் வைப்புச் செய்திருந்த மீதி ரூபா 10,120,447 தொகையாக இருந்ததுடன் அதனுள் 2005 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ரூபா 6,788,954 இற்கான மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நட்டஈடுகள் செலுத்துவதற்காக பணிகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 4,781,403 இற்கான தொகையில் 2005 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பான ரூபா 939,510 தொகை பல்வேறு காரணங்களினால் 2016 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட சாராருக்கு தீர்ப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) வெளிநாட்டு தூதரக நலன்புரி பிரிவில் இருந்து 2006 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக சேகரித்து பணியகத்திற்கு அனுப்புவதற்காக திறைசேரிக்கு அனுப்பியிருந்த தொழிலாளர் ஒப்பந்த உடன்படிக்கைக் கட்டணம் ரூபா 2,622,815,725 இல் ரூபா 953,461,366 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2000 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 84 வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 658,250 இற்கான செஸ்வரி 2016 திசெம்பர் 31 திகதி வரையும் அறவீடு செய்வதற்கு அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடவடிக்கை ஒன்று பணியகத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஆண்டு மற்றும் 2014 ஆண்டு தொடர்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொலைபேசி விலைப்பட்டிகளை தீர்ப்பதற்காக தொடர்பாக வரிசை அமைச்சிலிருந்து பெற வேண்டிய ரூபா 3,213,783 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2008 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை விமான நிலைய அலகுகள் மூலம் பணியக பதிவு செய்தல்களைப் பெற்றுக் கொடுக்கும் போது அறவிடப்பட வேண்டிய மொத்தக் கட்டணத்தை செலுத்தாத வெளிநாடு செல்வோரிடம் பெற வேண்டிய ரூபா 602,759 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு அல்லது அது தொடர்பாக வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பணியகத்திற்கு சொந்தமான சேர்ந்த கட்டிடமொன்றில் நடாத்தப்படும் ஓமான் தூதரகத்திற்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து 2013 ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 52,270,080 தொகையின் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 37,172,298 தொகைக்கான பலவின கடன் கொடுத்தோர் மீதியில் 2012 ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதிகள் தொடர்பான ரூபா 24,317,124 தொகையான மீதி 2017 ஜூன் 30 திகதி வரை தீர்ப்பதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு பணியகம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2015 ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த கொரியா விசா வைப்புகள் ரூபா 730,200 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருதுக்கவில்லை.

(ஒ) கொரிய அனுமதிப்பத்திர கட்டணத்திற்கான 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக அறவீடு செய்யப்பட்டிருந்த ரூபா 89,184,454 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரையும் கொரியா வேலைவாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஓ) ஊழியர் கடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட ஒரு வருட காலத்தை மிகைத்து இடர் மற்றும் வாகனக் கடன் மீதி ரூபா 2,222,165 தொகையாக இருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுககின்றன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்க ளுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| i. நிதிப்பிரமாணம் 371 | துணைக் கட்டு நிதிகளாகப் பெற்றிருந்த முற்பணங்கள் வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு அப்பால் தாமதிக்கக் கூடாது எனினும் அதற்கு முரணாக 2003 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 7,559,410 தொகைக்கான கட்டுநிதிகள் முற்பணத்தை தீர்த்திருக்கவில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 571 | திருப்பி செலுத்த வேண்டிய ரூபா 1,875,084 தொகைக்கான கேள்வி வைப்புக்களுள் 05 வருடங்களை மிகைத்த ரூபா 578,680 இற்கான வைப்புக்களை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| iii. நிதிப்பிரமாணம் 757(2) | 2014 ஆண்டிற்கான சொத்துக்கள் மெய்மையாதலின் போது இனங் காணப்பட்ட 2106 உபகரண விடயங்கல் காணாமல் போனது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பணியகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 ஜுன் 02 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட வேண்டிய வரைவு வருடாந்த அறிக்கை 2017 நவம்பர் 24 திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. |
| (ஈ) | 2014 நவம்பர் 22 ஆம் திகதிய PRE/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளர் சுற்றறிக்கையின் 05(i) ஆம் பந்தி | சுற்றறிக்கைக்கு முரணாக பதுளை மற்றும் மொணராகலை மாவட்டங்கள் தேர்தல் காலப்பகுதியில் ரட்டவிரு அமைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திற்கான பயன்படுத்துவதற்கான வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனங்களுக்காக 2016 ஆண்டின் போது ரூபா 2,858,641 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் பணியக உத்தியோகத்தர்களுக்கு தின வரவு படி, மாதாந்த இலக்கை நிறைவேற்றல் படி, விமான நிலைய அலகின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள், 24 மணித்தியாளங்கள் பூராகவும் செயற்படும் வெளிநாடு சென்றோர் தொடர்பாக தகவல் ஒலிப்பதிவு கூடத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விஷேட படிகள் செலுத்தல் மற்றும் ஆபத்து படி என ரூபா 64,491,839 இற்கான பலவித படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி செயலாற்றுகை

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது தொகுதியின் மற்றும் பணியகதின் நிதி விளைவுகள் முறையே ரூபா 944,363,600 தொகை மற்றும் ரூபா 942,355,085 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்ரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் முறையே ரூபா 884,713,213 தொகை மற்றும் ரூபா 883,817,095 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் தொகுதியின் மற்றும பணியகத்தின் நிதி விளைவுகள் முறையே ரூபா 59,650,387 இனால் மற்றும் ரூபா 58,537,990 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. செயற்பாட்டு மற்றும் நிதி வருமானம் ரூபா 622,757,544 இனால் அதிகரித்தல் மற்றும் விளம்பர செலவுகளில் மற்றும் நலன்புரி நிதியத்தின் ஏனைய செலவுகள் ரூபா 44,714,891 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சிக்கு காரணமாகியுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை தேறிய இலாபத்தில் வளர்ச்சி ஒன்று காணப்பட்ட போதிலும் அது 2015 ஆண்டின் போது சிறு அளவில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் 2016 ஆண்டின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 57.5 சதவீதத்திற்கான வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. மேலும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனங்கள், அரசுக்கு செலுத்திய வரி மற்றும் பெறுமானத் தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 1,252,718,830 இற்கான பணியகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 2,640,624,061 தொகை வரை வளர்ச்சியடைந்ததுடன் 2015 ஆண்டிற்கு நேரொப்ப அவை 50 சதவீதத்திற்கான வளர்ச்சி ஒன்றினை அடைந்திருந்தது.

## 3.2 பணியகத்திற்கு எதிராக அல்லது பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

வெளி மற்றும் உள் சாராரினால் பணியகத்திற்கு எதிராக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் பணியகத்தினால் அதற்காக ரூபா 73,766,962 தொகை எதிர்பார்க்கும் பொறுப்புகள் என இனங்காணப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்திற்கு செய்திருந்த முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை கிடைத்திருந்த முறைப்பாடுகளில் 2267 தொகை 2016 ஜனவரி 01 திகதி அளவில் தீர்க்கப்படாமல் இருந்ததுடன் வருட இறுதியளவில் அவற்றில் 244 தொகை மேலும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

(ii) 2016 ஆண்டின் போது கிடைத்திருந்த 5,686 முறைப்படுகளில் 2,320 தொகை எனப்படும் 41 சதவீதம் மாத்திரம் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டின் போது முறைப்பாட்டாளர்கள் தொடர்ந்து செயற்பட தேவையில்லை என அறிவித்தல் மற்றும் முறைப்பாட்டாளர்களிலேயே கோவைகள் மூடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 1,911 ஆகும். அதன் பிரகாரம் தீர்ப்பு ஒன்று இன்றி கோவைகள் மூடப்படல் மற்றும் முறைப்பாட்டாளர்கள் தொடர்ந்து செயற்படத் தேவையில்லை என அறிவித்ததன் காரணமாக மூடி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட 2,274 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவை முறையற்றதென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்து உண்மையாகவே தொடர்ந்தும் சிக்கல் ஒன்று காணப்படுகின்றவா என பரிசோதனை மேற்கொள்ளவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) முறைப்பாடுகளுக்கு வழங்கியிருந்த தீர்ப்பு ஒன்று ஆக ‘‘வெளிநாடு சென்றிருந்த ஊழியர்கள் திருப்பி இலங்கைக்கு வரவழைத்தல்’’ என குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வாறு திருப்பி அழைத்திருந்தத வெளிநாடு சென்றோர் 2016 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் 5,686 இல் 2016 ஊிழியர்களை மீண்டும் இலங்கைக்கு தருவிப்பதன் மூலம் மாத்திரம் தீர்ப்பு வழங்கியிருந்தவையாக காணப்பட்டதுடன் இவ்வாறான சிக்கல்கள் மீண்டும் ஏற்படாதிருக்க நிரந்தர தீர்வு வழங்குவதல் தொடர்பாக கவனம் செலுத்தும் நடைமுறையொன்றினை ஏற்படுத்துவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பணியகச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்று புதுப்படுத்தும் போது அங்கு 28 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை கடைப்பிடித்துள்ளதாக பணியகம் திருப்தி அடைய வேண்டியதுடன், சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் அந்த ஏற்பாடுகள் ஏதும் மீறப்பட்டிருப்பின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கும் இயலுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள 27

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிலையங்கள் தொடர்பாக இரண்டு வருடங்களில் கிடைத்திருந்த முறைப்பாடுகள் மற்றும் வெளிநாடு செல்வதன் பரிசோதனை செய்த போது முகவர் நிலையங்களில் முறைப்பாடுகளால் அதிகரிப்பு ஒன்று மற்றும் இரண்டு வருடங்களில் வெளிநாடு சென்றவர்கள் குறைவடைந்ததை விட குறைந்த சதவீதத்தில் முறைப்பாடுகள் கிடைத்தல் குறைவடைந்திருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் வெளிநாடு செல்லல் அதிகரித்திருந்த போதிலும் அதைவிட கூடிய சதவீதத்தில் முறைப்பாடுகள் அதிகரித்திருத்தல் அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக பணியகம் மேற்கூறிய சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது சிக்கல் நிலைமை காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ தொழற்பாடுகள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சமூர்த்தி அதிகார சபை மற்றும் பணியகத்தின் ஒத்துழைப்புடன் வெளிநாடு செல்லும் ஊழியர்களுக்காக செயற்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 10,264 வெளிநாடு சென்றோருக்கு சமூர்த்தி வங்கியின் மூலம் ரூபா 2,998 மில்லியன் கடன் தொகையொன்று வழங்கியிருந்ததுடன் தற்போது அத்திட்டம் செயலிழந்துள்ளது. அவற்றில் 26 சதவீதம் ஆகிய 2674 வெளிநாடு சென்றவர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 610.14 மில்லியன் (20 சதவீதத்தினனை) கடனை திருப்பி செலுத்துவதை புறக்கணித்திருந்தனர். மேலும் 1,573 வெளிநாடு சென்றோருக்கு கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு முரணாக மற்றும் எதுவித பிணையுமின்றி மொத்தத் தொகையில் 12 சதவீதம் எனப்படும் ரூபா 360.27 மில்லியன்களுக்காக கடன்வழங்கியிருந்தது மேலும் பணியகத்தினால் மேற்கூறிய விடயத்திற்காக சமூர்த்தி அதிகார சபையில் வைப்புச் செய்திருந்த ரூபா 100 மில்லியன் வைப்புத் தொகையின் வட்டியும் 2014 ஆண்டு முதல் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அபூதாபி அலுவலகத்தின் 2014 ஜூன் மாதம் ஏற்பட்டிருந்த ரூபா 1,058,276 இற்கான நிதிமோசடி தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு 2014 ஜூன் 17 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டு மூன்று வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அதில் கணிசமான முன்னேற்றமொன்று கணக்காய்வின்போது அவதானிக்கப்படவில்லை. இது தொடர்பாக பணியகத்தினால் முறையான செயற்பாடுகளும் எடுத்திருக்கவில்லை.

(இ) பணியகத்தினால் 101 சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 2,822,750 இற்கான முற்பணத் தொகையில் ரூபா 1,762,741 தொகை அதாவது 50 சதவீத்தை விட கூடிய தொகையொன்று பயன்படுத்தப்படாமல் மீண்டும் பணியகத்திற்கு தீர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முற்பணத் தொகை முறையான முகாமைத்துடன் வழங்கியிருந்தென கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(ஈ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95 மில்லியன் உடைய வ/ப கஹகொல்ல பொறியியல் சேவை கம்பனிக்கு சொந்தமான காணி ஒன்று 99 வருட குத்தகைக்கு பெறுவதற்காக பணியகத்தினால் 2013 ஆண்டின் போது ரூபா 20 மில்லியன் முற்பணமொன்று வ/ப அரச மூலவள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஜனவரி 17 திகதிய 10/2013 (M-01) இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கட்டிடங்களின் மற்றும் காணியின் சிக்கலற்ற உரிமையைப் பெற்றுக்கொள்ளுமாறு பணியகத்திற்கு அறிவித்திருந்த போதிலும் 2017 அக்டோபர் வரை காணியின் சிக்கலற்ற உரிமையை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(உ) பணியகத்தினால் தங்காலை மற்றும் குருநாகல் காணிகள் அபிவிருத்தி செய்யும் விடயத்திற்காக ரூபா 309,600,107 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 அக்தோபர் வரை இக்காணிகளை உரித்தாக்குவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பணியகத்தில் பயிற்சி நிலையம் ஒன்று அமைப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிடிபன மகாசேனவத்த என்ற 05 ஏக்கர் காணி 50 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2010 நவம்பர் 03 திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2010 ஜனவரி 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக பெறுமதி மதிப்பீட்டுக் குழுவினால் ரூபா 52 மில்லினிற்கு பெறுமதி மதிப்பீடு செய்து அப்பணத்தில் 50 சதவீதமாகிய ரூபா 26 மில்லியன் பணியகத்தினால் 2010 பெப்ரவரி 26 திகதி செலுத்தி காணியின் பௌதீக உரிமையை பணியகத்திற்கு உரித்தாக்கியிருந்தது. இந்த காணி தொடர்பாக பிரதான பெறுமதி மதிப்பீட்டாளர் மூலம் பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக்கொள்ளாமல் 50 சதவீதத்திற்காக கொடுப்பணவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 04 திகதி வரையும் அக்காணியின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு மற்றும் குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் குறிக்கோள்களில் இலங்கையர்களுக்கு இலங்கைக்கு வெளியே வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களின் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன அடங்கியிருந்த போதிலும் 2008 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை பணியகத்திற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த தொழில் கட்டளைகள் எண்ணிக்கையில் 50 சதவீதம் வரையேனும் தொழிலாளர்களை அனுப்புவதற்கு பணியகத்திற்கு முடியாதுள்ளது.

(ஆ) 2008 ஆண்டிற்கு நேரொப்ப 2012 ஆண்டின் போது வெளிநாட்டு வேலை கட்டளைகளின் குறைவடைந்தல் 40 சதவீதமாக இருந்ததுடன் 2013 ஆண்டின்போது 21 சதவீத்தினால் அதிகரித்திருத்தது. எனினும் 2014 ஆண்டிலிருந்து 2016 ஆண்டு வரை அது படிப்படியாக போது கீழிறங்கியிருந்ததுடன் அது 2014 ஆண்டிற்கு ஒப்பாக 34 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2008 ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆண்டின் போது தொழில் சந்தை இழப்பு 73 சதவீதமாகும். 2008 ஆண்டின் போது 16 சதவீதமாக காணப்பட்ட தொழிலாளர் வழங்குதல் 2016 ஆண்டளவில் 32 சதவீதம் வரை அதிகரித்தல் ஒன்றினைக் காட்டிய போதிலும், அது பணியகத்திற்கு செயலாற்றுகையின் முன்னேற்றத்தின் காரணமாக ஏற்பட்டதன்றி வெளிநாட்டு வேலை வாய்ப்பு சந்தையில் இலங்கை தொழிலாளர்களுக்கு காணப்பட்ட கேள்வி குறைந்திருந்தல் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் அதிகமாக வெளிநாட்டு தொழில் சந்தைக்கு அனுப்புவதற்காக கிராமிய மட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்கு விளிப்புணர்வு ஏற்படுத்துவற்காக இரத்திரபுரி மற்றும் காலி மாவட்டங்களை மத்திய மயப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த முன்னோடிச் செயற்திட்டகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் அம் மாவட்டங்களில் இருந்து கூட்டிணைப்பு உத்தியோகத்தர்கள் முறையே 06 மற்றும் 04 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். 2016 ஆண்டின் போது ரூபா 30,000 இற்கான படி ஒன்று செலுத்துவதற்காக சேர்க்கப்பட்டிருந்த அந்த உத்தியோகத்தர்கள் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,344,000 இற்கான செலவு ஒன்று பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அந்த முன்னேற்றம் செயற்திட்டத்தின் காலம் முடிவடைந்து இருந்த போதிலும் அது தொடர்பான செயற்திட்டத்தின் முன்னோடி தொடர்பாக தொடல் செயல் நடவடிக்கைகள் ஏதும் பணியகத்தினாலி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அமைச்சர் சிங்கப்பூரிலிருந்து பெற்றிருந்த மருத்துவ சிகிச்சைக்காக செலவிடப்பட்ட 989.25 சிங்கப்பூர் டொலர்கள் (அண்மித்த ரூபா 102,993 தொகை) பணியகத்தின் நலன்புரி நிதியத்திலிருந்து மேற்கொள்ள முடியாதெனினும் அப்பணத்தை வேறு ஒரு உத்தியோகத்தரின் பேரில் அமைச்சருக்கா மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்திய மூலவளங்கள்**

பின்வரும் அவதானிப்புகளை மேற்கொள்ளப்பட்டன.

(அ) அகற்றுவதற்கு ஒதுக்கியிருந்த பணியகத்தின் 27 வாகனங்களின் 2015 ஜூலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதி வரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மூடப்பட்டிருந்த பயிற்சி நிலையங்களின் 07 பண்ட விடயங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்பிற்காக வெளியே செல்லும் மற்றும் சேவை செய்த பின்னர் நாட்டுக்கு வரும் இலங்கையர் தொடர்பான தரவு வங்கி ஒன்று நிறுவி பேணப்படுவதற்காக பணியகம் செயற்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2016 ஜனவரி 08 முதல் 14 வரையான காலப்பகுதியில் பதிவுகளை மேற்கொள்வதற்காக செயற்படுத்திய விளம்பர விடயங்களுக்காக பணியகம் ரூபா 8,274,964 தொகை செலவிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அக்காலப் பகுதியில் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 563,768 வெளி-நாடு சென்றிருந்த தொழிலாளர்களில் 25 சதவீதம் ஏனும் மேற்கூறிய தரவு வங்கியில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஆக்கபூர்வமாக இருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பிரயாணங்கள் தொடர்பாக பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 463,481 தொகை அமைச்சின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி செய்யப்பட்டமையினால் அமைச்சினால் மீளளிப்பு செய்வதை நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பணியக சட்டத்தின் 53(3) பிரிவிற்கு புறம்பாக பணியகத்தினால் பெயர் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் ஊடாக பதிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டு உள்ளக சுற்றறிக்கை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பதிவுக் கட்டணமாக பணியகத்தினால் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் அதாவது ரூபா 31,612,000 தொகை மற்றும் ரூபா 91,623,000 தொகை என கூட்டுத்தொகை ரூபா 123,235,000 தொகை அதாவது அவ்வாறு பெயர் குறிப்பிட்ட தனியார் முகவர் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தமையால் பணியகம் அந்த வருமானத்தை இழந்துள்ளது.

(இ) கொரிய தொழில் பெறுவோருக்கு மருந்துவ பரிசோதனை மேற்கொள்வதற்காக தேவைப்படும் நிருவாக சேவைகள் வழங்கும் விடயங்களுக்காக குறிப்பிட்ட மாதத்திற்கான மருத்துவ கட்டண வருமானத்தில் 25 சதவீதம் பணியக நிறுவாக கம்பனிக்கு செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. அதன் பிரகாரம் கம்பனி ரூபா 9,507,988 இற்கான வருமானம் ஒன்றின் உழைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட அனைத்து நிருவாக விடயங்களும் பணியகத்தின் ஆட்சேர்ப்பு பிரிவினை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.7 வேறு நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த பணியகத்தின் மூலவளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டின் போது பணியகத்தினால் வரிசை அமைச்சுக்கு 07 உத்தியோகத்தர்களும் நிருவாக கம்பனிக்கு 03 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிந்ததுடன் சம்பளங்கள் படிகளாக ரூபா 5,308,240 தொகை பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அது தவிர சப்பிரகமுவ மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பணியகத்தினால் 2016 ஆண்டின் போது வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் விடயங்களுக்காக 04 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 3,292,242 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியின் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 1248 ஆக இருந்ததுடன் பதவிநிலை, பதவிநிலை அல்லாத மற்றும் ஏனைய தொகுதிகளைச் சேர்ந்த முயையே உத்தியோகத்தர்கள் 81, 38 மற்றும் 11 இற்கு பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் சிற்றூளியர்கள் 46 பேர் மிகையாக காணப்பட்டனர்.

(ஆ) மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்படாத 05 பதவிகளுக்காக உத்தியோத்தர்கள் 44 பேர் ரூபா 17,892,771 இற்கான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் தூதரக சபைக்கான முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இனை புறம்பாக பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றின் பிரகாரம் ஆட்சேர்ப்புகள் நடைபெற்றுள்ளன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | ---------------------------------------------------- | ------------------------- |
| (அ) | கணக்கீடு | (i) பணியகத்திற்கு கிடைக்க வேண்டிய மற்றும் பணியகத்தினால் செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்ப்பதில் தாமதம் காணப்பட்டமை. |
| | | (ii) வெளிநாட்டு தூதரக சபைகளின் மூலம் உழைக்கப்படும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் ஆக்கபூர்வமான வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு அப் பணம் சேவைகள் வழங்குவதற்கு பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) காணிகள் கொள்வனவு செய்யும் போது முறையான உரிமையினை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| | | (ii) வெளிநாட்டு தொழில் முகவரி நிலையங்களின் விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு மற்றும் நிருவகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | மனிதவள கட்டுப்பாடு | பணியகத்திற்கு சொந்தமான பௌதீக மற்றும் மனித வளக் கட்டுப்பாடு மற்றும் பயன்படுத்தல் முறைப்படி நடைபெறாமை. |